**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**CC. No.1719/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அருள் சாமி | த–பெ | வேதமுத்து |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026**

**எதிரி ஆஜர்.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்மந்தமாக சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரியானவர் முன் விரோதத்தை மனதில் வைத்து என்னிடம் தகராறு செய்தார். அது தொடர்பாக காவல் நிலையம் சென்றோம். போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.1**. வழக்கு சமயத்தில் 22.01.2020 அன்று இரவு 7.30 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தேன். அந்த வழியாக வந்த நபர் முன் விரோதத்தை மனதில் வைத்து என்னை கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி, முதுகில் அடித்து காயப்படுத்தினார். கொலை மிரட்டல் செய்தார். எதிரி அங்கு இருந்ததால் அவர் தான் தாக்கியிருப்பார் என்று தவறுதாலாக புகார் அளித்து விட்டேன். மற்றபடி இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 22.01.2020 அன்று இரவு 7.30 மணியளவில் தன்னுடைய வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரியானவர் மது போதையில் அங்கு வந்து தனக்கு சொந்தமான 6 ஆடுகளை பணம் கொடுக்காமல் எடுத்து சென்றதாகவும், மீண்டும் பணம் கேட்டதற்கு கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி, கையில் வைத்திருந்த அருவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், தன்னை முதுகில் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும் இது சம்மந்தமாக நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்து விட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பத்தை மறைத்து தற்போது பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.26 09:38:37 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**CC. No.1719/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாஸ்கர் | த–பெ | அருள் சாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 41/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 22.01.2020 அன்று நானும் எனது தகப்பனாரும் ஊரில் எங்களது வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரியானவர் அங்கு வந்து எங்களுக்கு சொந்தமான ஆடுகளை எடுத்து சென்றார். அப்போது எனது அப்பா கேட்டதற்கு எதிரியானவர் எனது தகப்பனாரை திட்டியுள்ளார். சம்பவயிடத்தில் நான் இல்லை அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வர சொன்னார்கள் நான் சென்றேன். மற்றபடி வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸ் விசாரணையில் கடந்த 22.01.2020 அன்று இரவு 7.30 மணியளவில் தன்னுடைய தகப்பனாருடன் வீட்டில் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரியானவர் அங்கு வந்து ஆடுகளை அழைத்து சென்றதாகவும், அது குறித்து தனது தகப்பனார் கேட்டதற்கு கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி, முதுகில் அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்த விவரத்தை நேரடியாக பார்த்து சொல்லிவிட்டு தற்போது உண்மை சம்பத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.26 09:38:45 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.